பக்கங்கள் 17

காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 08 புதன்கிழமை 24.07.2024 அதிர்வு 358

## செப்டெம்பர் 21 இல் ஜனாதிபதித் தேர்தலா?

ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறக்கூடும் எனவும், எதிர்வரும் ஆகஸ்ட் 15 முதல் 20 ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் ஏற்கப்படும் எனவும் தெரியவரு 04

# இலங்கையின் வரலாற்றில் மிகவும் இருண்ட அத்தியாயமே 'கறுப்பு ஜூலை'

## தமிழ்ச் சமூகத்துக்கு எதிரான கொடூரங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் எனக் கனடா அழுத்தம்

"இலங்கையின் வரலாற்றில் மிகவும் இருண்ட அத்தியாயமாக கறுப்பு ஜூலை விளங்குகின்றது. மனித உரிமைகளின் உறுதியான பாதுகாவலன் என்ற அடிப்படையில் தமிழ்ச் சமூகத்துக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் குறித்து இலங்கை பொறுப்புக்கூற வேண்டும் எனக் கனடா தொடர்ந்தும் வலியுறுத்தும்." 04



### யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## முஸ்லிம் மக்களின் வாழ்விடப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான விசேட கலந்துரையாடல்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் முஸ்லிம் மக்களின் வாழ்விடப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் தலைமையில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

கைதடியில் உள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அருவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், யாழ். மாவட்ட பதில் அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், யாழ். மாநகர சபையினர், யாழ். பல்கலைக் கழகப் பொறியியல் பீடத்தினர் உட்பட பல திணைக்களத்தினரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மீளக்குடியமர்ந்து நிரந்தர வீடு அற்ற முஸ்லிம் மக்களுக்கு ஒரு தொடர் மாடி வீடு அமைத்துக் கொடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. 04




அன்பர் ஒருவர் வாட்ஸ் அப்பில் ஒரு தகவல் அனுப்பி இருந்தார். கவிதை வடிவத்தில் இருந்தது. அதை வாசித்து முடிப்பதற்கு இடையில் அவரின் தொலைபேசி அழைப்பு வந்தது.

"எல்லா இடங்களிலும் புதிதாகத் திறக்கப்படும் மதுபானச் சாலைகளுக்கு எதிராக அவ்வப்போது போராட்டங்கள் நடைபெறுகின்றன. எம்.பிமாருக்கு வாகன பெர்மிட் வழங்க முடியாத அரசு, அதில் அவர்கள் உழைக்கும் பணத்துக்கு பதிலாக மதுபான சாலை பெர்மிட்டு களை நாய்க்கு எலும்புத் துண்டு வீசுவது போல வீசி இருக்கின்றது. ஆளாளுக்கு குறைந்தது இரண்டு. அரசின் கணக்கு இரண்டு படி நாலு 04





# கறுப்பு ஜூ லை நினைவேந்தல் யாழில் நேற்று மாலை அனுஷ்டிக்கப்பட்டது

கறுப்பு ஜூலையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ் முற்றவெளி மைதானம் முன்பாக நேற்று மாலை இந்நினைவேந்தல் நடைபெற்றது.

இதன்போது நினைவேந்தல் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு ஏனையவர்களும் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இந் நிகழ்வில் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன், மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

“மேலும் ஈழத்தமிழர்கள் மீதான சிறிலங்காஅரசின்இனப்படுகொலைக்கு நீதி வேண்டும். 1983 கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலையானது சிறிலங்கா அரசாங்கத்தினால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டது. வெலிக்கடை சிறைசாலையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளையும் நாடு முழுவதும் படுகொலை செய்யப் பட்ட தமிழர்களையும் நினைவு கூர்கிறோம்.

1948 முதல் இன்றுவரை நடைபெற்ற நடைபெறுகின்ற இனஅழிப்பை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் விசாரிக்க வேண்டும்.” – எனவும் நேற்றைய நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது.











# பெண் சட்டத்தரணியொருவர் நேற்றுக் கைதாகிப் பிணையில்

## சாவகச்சேரி நீதிமன்றம் அனுமதி

ஆள்மாறாட்டம் தொடர்பான வழக்கில் யாழ்ப்பாணம் – உடுவில் பகுதியைச் சேர்ந்த பெண் சட்டத்தரணியொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் பிராந்திய விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதான சட்டத்தரணி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டநிலையில் 10 லட்சம் ஷரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அத்துடன் சட்டத்தரணியின் அலுவலகத்தில் இருந்த மூன்று கணினிகளையும் பகுப்பாய்வு விசாரணைக்குட்படுத்த நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது :-

இத்தாலியைச் சேர்ந்த பெண்ணொருவர், யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி விவாகரத்துக்கு விண்ணப்பிக்கச் சென்றபோது, அவர் ஏற்கனவே விவாகரத்துப் பெற்றுள்ளார் என்று தரவுகள் வெளிக்காட்டியுள்ளன.அந்தப் பெண் அதுவரை விவாகரத் துக்கு விண்ணப்பிக்காத நிலையில், இது தொடர்பில் பொலிஸாரிடம் முறை யிட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணைகளில், உடுவில் பகுதியில் உள்ள சட்டத்தரணியொருவர் கனிஷ்ட சட்டத்தரணிகள் மூலமாக ஆள்மாறாட்டம் செய்து , மேற்படி தம்பதியர்கள் விவாகரத்துப் பெற்றுக்கொள்வதாக நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை தெரியவந்தது.

இதையடுத்து, இது தொடர்பில் குறித்த சட்டத்தரணியின் அலுவலகத்தில் சில வாரங்களுக்கு முன்னர் பொலிஸாரால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

நேற்று மேற்படி பெண் சட்டத்தரணியின் சார்பில் மன்றில் சட்டத்தரணி கேசவன் சயந்தன் முன்னிலையாகியிருந்தார்.



# ஏற்றுமதி வருமானம் ஜூனில் அதிகரிப்பு

இலங்கை சுங்கத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தற்காலிகத் தரவுகளுக்கு அமைய, கடந்த ஜூன் மாதம் ஏற்றுமதி வருவாய் 1031.2 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது.

இது 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2.58 சதவீத அதிகரிப்பாகும்.

ஆடை, தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை சார்ந்த ஏற்றுமதிகளின் காரணமாக இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

அதேநேரம் 2024 ஆம் ஆண்டின் மே மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த ஜூன் மாதம், ஏற்றுமதி 1.97 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

# பருத்தித்துறை வன்முறைச் சம்பவத்தில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம், பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் ஒன்றில் மூவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள் ளனர்.

காயமடைந்த மூவரில் இருவர் கத்தி வெட்டுக்கு இலக்காகி வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். மற்றையவர் இரும்புக் கம்பியால் தாக்கப்பட்டதில் காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ரணிலை ஜனாதிபதியாக்கியே தீருவோம்!

## மஹிந்தவின் சகா சபதம்

"நான் மஹிந்த ராஜபக்ஷவின் வலது கை என்ற போதிலும் நாட்டின் நலன் கருதி ஜனாதிபதி ரணில் பக்கம் தற்போது நிற்கின்றேன். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிலும் அவருக்கே வாக்களிப்பேன். அவரை ஜனாதிபதியாக்கியே தீருவோம்."

– இவ்வாறு இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

"பண்டாரநாயக்க எனது மாமா, சிறிமா எனது அத்தை, சந்திரிகா எனது அக்கா, ஜெனரல் ரத்வத்த எனது தந்தை. இவ்வாறு அரசியல் பின்னணி கொண்ட குடும்பத்தில் இருந்தே நான் அரசியலுக்கு வந்துள்ளேன்.

எனவே, ஜே.வி.பியினரின் மிரட்டல்களுக்கு அஞ்சமாட்டோம். பேய்களுக்கு பயமெனில் சுடுகாட்டில் வீடு கட்டமாட்டோம் என்பதை அநுரகுமார திஸநாயக்கவுக்குக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

ரணிலுக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களிக்கும்போது கை நடுங்கியது. ஆனால், அந்த முடிவு சரியென்பது இன்று உறுதியாகியுள்ளது. அது மகிழ்ச்சியளிக்கின்றது. எனவே, அடுத்த தேர்தலிலும் நான் ரணில் பக்கம்தான் நிற்பேன். ரணிலை ஜனாதிபதியாக்கியே தீருவோம்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோடி. ஆனால் ஒரு பெர்மிட்டை எட்டு கோடிக்கு விற்ற அசகாய சூரர்களும் இருக்கின்றார்கள். அரசு வாகன பெர்மிட் கொடுத்தால் அரசுக்கு நேரடியாகப் பாதிப்பு. அந்நிய செலாவணி இழப்பு. மதுபான சாலை பெர்மிட்டுகளை விற்று மக்களிடம் இருந்தே நேரடியாகச் சூறையாடிக் கொள்ளுங்கள் என்று எம்பிக்களுக்கு மாற்று வழி சமைத்திருக்கின்றது போலும் அரசுத் தலைமை.

"அனைத்து இடங்களிலும் நடக்கின்றது என்று பார்த்தால் கிளிநொச்சி மாவட்டத்திலும் தாராளம். யாழ். மாவட்ட எம்.பிக்கள், முன்னாள் எம்.பி. என்று எல்லோரினதும் கைவரிசை. சின்ன ஜமீன் வாய் மூடி அமைதி பேணுவதேன்?" - என்று கேள்வி எழுப்பினார் அவர்.

இனி அவரின் வாட்ஸ் அப் செய்தி:-

✢ கரடிப்போக்கு சந்தியில் எதிரும் புதிருமாக இரண்டு பார்கள்.

✢பாரதி ஹொட்டேலுக்கு முன்னால் ஒன்று.

✢ கனகபுரம் விதியில் சந்தைக்கு முன்னால் ஒன்று.

✢ பரந்தன் சந்தியில் இரண்டு.

✢ பூநகரியில் ஒன்று.

✢இதைவிட இரண்டு றெஸ்ரோறண்ட்கள். கரடிப்போக்கு சந்தியில் ஒன்று. பரந்தன் சந்தியில் ஒன்று.

மது விற்பனை தாராளம். முழங்காவிலிலும் திறக்கவுள்ளனர் என்று தகவல்.

- இப்படி அமைந்தது அந்தச் செய்தி.

இன்னொரு விடயத்தையும் அவர் சொன்னார்.

"மன்னாரில் அதானி குழுமத்தின் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்திற்கு எதிராக உள்ளூர் மக்கள் நெருப்பு எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் எம்.பிமார் அந்தத் திட்டத்திற்கு எதிர்ப்பு காட்ட கிட்டவும் வருகின்றார்கள் இல்லை. இந்த எதிர்ப்பு நடவடிக்கைப் பக்கம் போகாதீர்கள் என்று அரசு அதிகாரிகளுக்கு வேறு நமது எம்.பிக்கள் அழுத்தம் கொடுக்கின்றனர் என்றும் தெரிகின்றது.

நமது எம்.பி. ஒருவர் மட்டும் சூரிய மின்சாரம் மூலம் 250 கிலோ வாட்ஸ் மின்சாரம் விநியோகிப்பதற்கான திட்டத்திற்கு யூனிட் 42 ரூபா என்ற உச்ச விலையில் அரச ஒப்பந்த அனுமதியை பெற்றுக் கொண்டிருக்கிறார். அந்தத் திட்ட இணைப்பு வேலைகள் மற்றும் பௌதிக இயக்கத்துக்கு மின்சார சபையின் இலவச சேவையும் ஒப்பந்தத்தில் உள்ளடக்கம். அதானிக்கு வழங்குவதில் அள்ளித் தெளிப்பது போல ஒரு பகுதி நமது எம்.பிக்கும் கிடைக்கும் போது அவர்கள் எப்படி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு சேர்ந்து வருவார்கள்?" - என்று கேள்வி எழுப்பினார் அவர்.

இன்றைய இரண்டு தகவல்களுக்கும் அவரே மூல இடம். சூத்திரதாரி. நான் வெறும் பிரதிபலிப்பாளன் மட்டுமே.

ரணிலின் ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் மீண்டதோ, என்னவோ, நமது மக்கள் பிரதிநிதிகள் காட்டில் மட்டும் நல்ல மழை. ஒருபுறம் தேசியம் பற்றிய பேச்சு. மற்றப்புறம் உழைப்பும் கொட்டுகிறது என்றால் சும்மாவா...?

---

### செப்டெம்பர்...

கின்றது.

தேர்தல் திகதி மற்றும் வேட்புமனு ஏற்கப்படும் திகதி உள்ளிட்ட தகவல்கள் எதிர்வரும் 24 அல்லது 25 ஆம் திகதிகளில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்றது எனவும் அறியமுடிகின்றது.

---

### இலங்கையின்...

– இவ்வாறு கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ஷரூடோ தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜுலைக் கலவரத்தின் 41 ஆம் ஆண்டைக் குறிக்கும் விதத்தில் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் கனேடியப் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

"41 வருடங்களுக்கு முன்னர் இன்றைய தினம் இலங்கையின் கொழும்பில் தமிழ் மக்களின் வர்த்தக நிலையங்களை இலக்குவைத்து தாக்குதல்கள் ஆரம்பமாகின. ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிர்கள் இழக்கப்பட்டன. மேலும் பல தமிழர்கள் காயமடைந்தனர். கொடூர வன்முறைகளுக்கு இலக்கானவர்கள், நாட்டிலிருந்து தப்பியோட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

கறுப்பு ஜுலையானது தமிழர்களுக்கு எதிரான இனக்கலவரம், பதற்றங்களை அதிகரித்தது. அது பின்னர் தசாப்தகால ஆயுத மோதலாகப் பரிணமித்தது. இலங்கையின் வரலாற்றில் மிகவும் இருண்ட அத்தியாயமாக கறுப்பு ஜுலை விளங்குகின்றது.

மே மாதம் 18 ஆம் திகதியை தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் தினமாக அங்கீகரிக்கும் தீர்மானத்தை கனடாவின் நாடாளுமன்றம் கடந்த 2022 ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது.

இந்த அர்த்தமற்ற வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தப்பிப்பிழைத்தவர்களை நினைவுகூர்வதில் கனடாவின் தமிழர்கள் மற்றும் உலகம் முழுவதும் உள்ள தமிழ்ச் சமூகத்தினருடன் ஐக்கியத்தை வெளிப்படுத்துவதற்கான கனடாவின் அர்ப்பணிப்பை இது வெளிப்படுத்துகின்றது.

மனித உரிமைகளின் உறுதியான பாதுகாவலன் என்ற அடிப்படையில் தமிழ்ச் சமூகத்துக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் குறித்து இலங்கை பொறுப்புக்கூற வேண்டும் என கனடா தொடர்ந்தும் வேண்டுகோள் விடுக்கும்.

கறுப்பு ஜுலையின் பின்னர் அதிகளவான தமிழர்கள் கனடாவுக்கு வந்தார்கள். அவர்களுக்குக் கனடா பல வழிகளிலும் உதவியது.

உலகில் அதிகளவு புலம்பெயர் தமிழர்கள் தற்போது கனடாவிலேயே வாழ்கின்றனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் எங்கள் சமூகத்துக்கு வழங்குகின்ற பங்களிப்பை நாங்கள் கொண்டாடுகின்றோம். நாங்கள் எப்போதும் அவர்களைப் பாதுகாப்போம்.

இன்றைய நாளில், கறுப்பு ஜுலையில் துயரத்தைச் சந்தித்த – அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதில் நான்கனடாவின்பிரஜைகளுடன்இணைந்து கொள்கின்றேன்." – என்றுள்ளது.

---

### செப்டெம்பர்...

கின்றது.

தேர்தல் திகதி மற்றும் வேட்புமனு ஏற்கப்படும் திகதி உள்ளிட்ட தகவல்கள் எதிர்வரும் 24 அல்லது 25 ஆம் திகதிகளில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்றது எனவும் அறியமுடிகின்றது.


Muhurtham Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY 27 2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மிருகத்தனத்தின் முகமூடி

அரச பயங்கரவாதம், அடாவடித்தனங்கள், அட்டூழியங்கள், அட்டகாசங்களை புரிவதற்குக் காலங்காலமாக வழி செய்யும் ஆட்சியாளர்கள் பின்னர் அவற்றைச் சமாளித்து அந்த நெருக்கடிகளில் இருந்து மீளுவதற்காக ஒரு முறைமையைக் கையாளுவார்கள்.

நடந்த தவறுகள், இழைத்த கொடூரங்களுக்காக பகிரங்கமாக மன்னிப்பு கோருதல், நஷ்ட ஈடு வழங்குதல், மீள நிகழாமையை உறுதிப்படுத்துதல் என்றெல்லாம் ஒவ்வொரு கயிற்றை விடுவார்கள். கதை அவிழ்ப்பார்கள். நாடகம் நடத்துவார்கள். இந்தத் தந்திர நகர்வுகளுக்கு இடையில் எல்லாம் ஒரு பொதுவான இழை ஓடும்.

அது - நடந்த உண்மைகளை மூடி மறைத்தல், பொறுப்புக் கூறல் மற்றும் நீதியை நிலை நாட்டல் போன்ற எதனையும் செய்யாது கடந்து போதல், குற்றவாளிகளை மறைத்தல் என்ற அப்பட்டமான ஏமாற்று போக்குதான்.

அந்த வகையில் இப்போது ஒரு விடயத்துக்கு ஓர் இனத்தின் காதிலேயே பூச்சுற்றும் வேலையை ரணில் விக்கிரமசிங்கவின் அரசு இந்தத் தேர்தல் சமயத்தில் முன்னெடுத்திருக்கின்றது.

கொரோனாத் தொற்றுநோய்களின்போது இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட கட்டாய தகனக் கொள்கை தொடர்பாக அரசின் மன்னிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கூட்டு அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாம்.

கொரோனாவின் மருத்துவ மேலாண்மை குறித்து சுகாதார அமைச்சு வெளியிட்ட சுகாதார வழிகாட்டுதல்களின்படி, வைரஸால் இறந்தவர்களின் உடல்களை அப்புறப்படுத்தும் முறையாகத் தகனம் செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டது என்று கூறப்பட்டது.

அதன்படி, கொரோனாத் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் அவர்களின் பாரம்பரிய முறைமைகளுக்கு மாறாகப் பலவந்தமாகத் தகனம் செய்யப்பட்டனர்.

இந்தநிலையில், கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்த இஸ்லாமியர்களின் உடல்கள் தகனம் செய்யப்பட்டமைக்கு மன்னிப்புக் கோரும் நோக்கில் இப்போது முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாம்.

அரசு உண்மைகளை மூடி மறைத்துக் கொண்டு, இப்படி மன்னிப்பு கேட்டு தப்பிச் செல்ல முடியாது. இது ஓர் இனத்துக்கே எதிராக பேரினவாதம் நடத்திய இன வெறியாட்டம். அடாவடித்தனம். அட்டகாசம். அட்டூழியம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

சுகாதார மருத்துவ நிபுணர் குழுவின் பரிந்துரையில் அப்படி செய்கின்றோம் என்ற பெயரில் உலகில் வேறு எங்குமே நடக்காத காட்டுமிராண்டித்தனமான இந்தக் கொடூரம் - குரூரம் - இங்கு அரங்கேறியது என்பது மறக்க - மறுக்க - கூடியது அல்ல.

உண்மையை வெளிப்படுத்துவதுடன் தான் மன்னிப்பு வரவேண்டும். அப்போது தான் அது உண்மையான மன்னிப்புக் கோரலாக இருக்கும். இல்லையேல் அது ஓரினத்தின் காதில் பூச்சூற்றும் பேரினவாதத்தின் பேய்க்காட்டலாகவே முடியும்.

உண்மையில் அப்படி ஒரு நிபுணர் குழு இருந்ததா, உலகின் வேறு எந்த நாட்டின் நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு தெரியாத ‘அறிவு மேதை’களாக இருந்த இந்த நிபுணர்கள் யார், யார், அவர்களின் விவரங்கள் யாது, அப்படி இல்லையேல் இல்லாத நிபுணர் குழுவின் பெயரில் ‘கோட்டா அண்ட் கோ’ நடத்திய சிங்கள வெறித்தனமான காட்டுத் தர்பார் வெறியாட்டம்தானா இது - போன்ற உண்மைகளுக்கு முடிவு தெரிய வேண்டும்.

இந்த உண்மைகளை மூடி மறைக்கும் வரலாற்றுத் துரோகத்துக்கு சிறுபான்மை இனத்தவர்களான அமைச்சர்கள் அலி சப்ரி, ஜீவன் தொண்டமான் போன்றோர் துணை போகக் கூடாது.

கொரோனா சடலங்களின் பலவந்த எரிப்பும், மாவீரர் துயிலும் இல்லங்களில் புதைக்கப்பட்ட பல்லாயிரம் போராளிகளின் வித்துடல்களை புல்டோசர் கொண்டு சிதைத்தழித்துச் சின்னாபின்னமாக்கியமையும் சிங்களத்தின் பேரினவாத வெறிக் கொடூரங்கள். இறந்த ஆத்மாக்களுக்கு எதிராக செய்யப்பட்ட - மனித நாகரிகம் இல்லாத - காட்டுமிராண்டித்தனம். மிருகத்தனமான இனவெறிப்போக்கு. அவை மனிதப்பண்பியல்புகளின் வெளிப்பாடல்ல. அதையும் தாண்டிய மிருகத்தனப் போக்கு. அவற்றின் உண்மைகளை மூடி மறைக்கத் துணை போவது மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் என்பதை சம்பந்தப்பட்டோர் மறந்துவிடக்கூடாது.



# ஜப்பான் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் அநுரகுமார திசாநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க, அந்த நாட்டின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சரை சந்தித்துள்ளார்.

ஜப்பானிய வெளிவிவகார அமைச்சில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவு, தூதரக மற்றும் பொருளாதார உறவுகளின் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் ஜப்பானின் தென்கிழக்கு, தென்மேற்கு ஆசிய விவகாரங்கள் திணைக்களத்தின் தென்மேற்கு ஆசியப் பணிப்பாளர் மற்றும் அதன் பிரதி பணிப்பாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினரும் பங்குபற்றியிருந்தனர்.







# மக்களின் அமைதியை பேணும் நோக்கில் முப்படையினரை கடமைகளில் ஈடுபடுவர்

## அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

நாட்டின் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் பொதுமக்களின் அமைதியை பேணும் நோக்கில், முப்படையினரை கடமைகளில் ஈடுபடுத்துவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

அதற்கமைய இராணுவம், விமானப் படை மற்றும் கடற்படையின் சகல உறுப்பினர்களும் நாட்டின் அனைத்து நிர்வாக மாவட்டங்களிலும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுவதற்காக அழைக்கப்பட்டுள்ளனர். நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சம்பள முரண்பாடை திருத்தத்துக்கு முன்மொழிவுகள் கோரப்படுகின்றன



அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான முன்மொழிவுகளைக் கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.presidentsoffice.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரிந்துரைகளை ps@presidentsoffice.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்ப முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை செப்டெம்பரில் வெளியிட நடவடிக்கை



கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை செப்டெம்பர் மாதம் வெளியிடுவதற்குப் பரீட்சைகள் திணைக்களம் தயாராக இருப்பதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஹோமாகமவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

“விடைத்தாள் மதிப்பீட்டிற்கான அனைத்து கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களின் பிரச்சினை தொடர்பில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானியை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடியும்.

வழக்கு விசாரணை முடிந்த பின்னர் அடுத்த வாரத்திற்குள் அந்த நியமனங்கள் அனைத்தும் வழங்கப்படும்.”– என்றார்.

# குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் பொது நினைவேந்தல்

## நாளை யாழ் நகரில் நடக்கின்றது

‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பின் ஏற்பாட்டில் பொது நினைவேந்தல் நிகழ்வு நாளை பிற்பகல் யாழ்ப்பாணத்தில் இடம் பெற இருக்கின்றது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:–

இலங்கை சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், பல்வேறு காலகட்டங்களில் சாவினைத் தழுவிய,தமிழ் அரசியல் கைதிகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செழுத்தும் நிகழ்வு பிரத்தியேகமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வானது, தமிழின வறலாற்றில் என்றுமே மறக்கமுடியாத ‘வெலிக்கடை சிறைப் படுகொலை ‘ இடம்பெற்ற நாளான எதிர்வரும் ஜூலை 25 ஆம் திகதி, வியாழக்கிழமை மாலை 3.05 மணிக்கு,

யாழ்ப்பாணத்திலுள்ள ‘தந்தை செல்வா கலையரங்கில்’ ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

சமூகத்தின் பெயரில் இலங்கைச் சிறைகளுக்குள் இரையாக்கப்பட்ட எமது உறவுகளை உணர்வுபூர்வமாக நினைவுகூறும் இந்நிகழ்வில், சர்வமதத் தலைவர்கள், அரசியல் கைதிகளின் பெற்றோர் உறவினர்கள், முன்னைநாள் அரசியல் கைதிகள், சர்வகட்சி அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவ மற்றும் ஆசிரியர் சமூகத்தினர், ஊடகத்துறை சார்ந்தவர்கள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் தவறாது கலந்துகொள்ளுமாறு சமூக உரிமையோடு அழைத்து நிற்கின்றோம்! – என்று உள்ளது.





# இலங்கை தொழிலாளருக்கு போலந்தில் வேலைவாய்ப்பு

இலங்கை தொழிலாளர்களுக்குக் குறிப்பிட்ட சில துறைகளில் வேலை வழங்குவதற்கு போலந்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் தளத்தில் இந்தத் தகவலை குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உடன்படிக்கையின் கீழ் இந்த வேலைவாய்ப்புகள் வழங்கப்பட உள்ளன.

இலங்கையர்கள் போலந்திற்குள் நுழைவதற்கான விசா கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணிலுக்கே மக்களின் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கும்

**ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவிப்பு**

“வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். “

– இவ்வாறு ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட நாடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் மீட்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க எமது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் நட்டமடையும் நிலையை தவிர்த்து இலாபம் ஈட்டும் நிலைக்கு வந்துள்ளன.



உலகில் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள ஏனைய நாடுகள் இவ்வளவு குறுகிய காலத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மையை எட்டவில்லை. இந்த ஸ்திரத்தன்மையை பேணுகின்ற அதேவேளை பொருளாதாரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அனைத்து தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

மேலும், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் கடந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட வரித் திருத்தங்கள் குறித்தும் மக்கள் மத்தியில் சில எதிர்ப்புகள் எழுந்தன. ஆனால், அந்த முடிவுகளின் நன்மைகளை மக்கள் பெறும்போது, அந்த எதிர்ப்பு மறைந்துவிடும். உலகில் உள்ள ஏனைய நாடுகள் நம் நாட்டை விட அதிக சதவீத வரிகளை வசூலிக்கின்றன என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த நெருக்கடியின் போது, மக்களிடம் பணம் இருந்தது.ஆனால் வாங்குவதற்கு பொருள்கள் பற்றாக்குறையாக இருந்தது. ஆனால் தற்போது அவ்வாறான நிலை இல்லை. எனினும், இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டின் நிலைமையை நாம் யாரும் மறந்துவிடவில்லை. எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எமது ஆதரவை வழங்குவோம். மேலும் கட்சி நிறமின்றி ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க மக்களும் தீர்மானித்துள்ளனர்.

அரசியல்வாதிகள் பல்வேறு கட்சிகளில் இணைந்திருந்தாலும் வாக்காளர்கள் மாறப் போவதில்லை என்பதையும் சொல்ல வேண்டும். வரவிருக்கும் தேர்தலில் வாக்காளர்கள் தனி நபரை பார்த்தன்றி வேலைத்திட்டத்தைப் பார்த்தே செயற்படுவார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும். குறிப்பாக அடுத்த தேர்தலில் பதுளை பிரதேசத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிக வாக்குகளை பெறுவார் . நமது நாட்டு மக்கள் செய்நன்றி மறக்காத நன்கு சிந்தித்து பணியாற்றுவார்கள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.”– என்றார்.

# பெருந்தோட்ட மக்களின் மனித உரிமையை மீறும் கம்பனிகளுக்கு எதிராக புதிய சட்டம் மிக அவசியம்

## வடிவேல் சுரேஷ் எம்.பி. தெரிவிப்பு



“நாட்டில் 11 மாவட்டங்கள் பெருந்தோட்டகளாக காணப்படுகின்றன. அந்த காணிகள் அனைத்தையும் 22 கம்பனிகளே நிர்வகித்து வருகின்றன. என்றாலும் பெருந்தோட்ட மக்களின் மனித உரிமையை மீறியே அந்தக் கம்பனிகள் நிர்வகித்து வருகின்றன. அதனால் இதற்கு எதிராக புதிய சட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும்.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நீதித்துறை சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாட்டில் ஏனைய சமூகங்களுக்கு இருக்கும் பொதுவான அனைத்து சட்டங்களும் மலையக சமூகத்துக்கும் வழங்க வேண்டும் அத்துடன் உழைப்புக்கு ஏற்ற சம்பளம் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஜனாதிபதியின் உத்தரவையும் மீறி பெருந்தோட்ட கம்பனிகள் செயற்படுகின்றன. சம்பள அதிகரிப்புக்கு எதிராக பெருந்தோட்ட கம்பனிகள் நீதிமன்றம் சென்று, தற்போது சம்பள அதிகரிப்புக்கு தடை உத்தரவையும் பெற்றுள்ளன. இது உலகில் எங்கும் இடம்பெறாத ஒன்றாகவே பார்க்கிறேன். இது மலையக மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அநீதியாகும்.

மேலும் பெருந்தோட்டங்களும் மேற்கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தம் இந்த நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டே மேற்கொள்ளப்படுகிறது. நாட்டின் சட்டம் அனைவருக்கும் பொதுவானது. 25 மாவட்டங்களில் 11 மாவட்டங்கள் பெருந்தோட்டங்களாக இருக்கின்றன. அதிகமான காணிகள் அந்த பெருந்தோட்ட கம்பனிகளுக்கு இருக்கின்றன. 22 கம்பனிகள் அந்த மக்களுடைய மனித உரிமையை மீறி அங்கு நிர்வாகம் நடத்தி வருகின்றன. அதனால் இதற்கு எதிராக புதிய சட்டம் ஒன்றை ஏற்படுத்த அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெருந்தோட்டங்களை கிராமங்களாக்கும் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பிப்பதாக தெரிவித்திருப்பதை சட்டமாக்கி வர்த்தமானியில் வெளியிட்டால் எமது மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய நிலைமை ஏற்படும். அதனால் நாட்டில் ஏனைய சமூகங்களுக்கு இருந்து வரும் அனைத்து சட்டங்களும் மலையக பெருந்தோட்ட மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.”– என்றார்.

# ஜனாஸா எரிப்பு, கறுப்பு ஜூலைக்கு மன்னிப்புக் கோரினார் நீதியமைச்சர்

“கொவிட் பெருந்தொற்று தாக்கத்தினால் உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டமைக்கு அரசாங்கம் என்ற ரீதியில் முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோருகிறோம். அத்துடன். 41 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு ஜூலை சம்பவத்துக்கும் தமிழ் மக்களிடம் நாட்டின் பிரஜை என்ற ரீதியில் மன்னிப்பு கோருகிறேன்.”

– இவ்வாறு நீதியமைச்சர் விஜயதாச ராஜபக் ஷ சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்.

“அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் ஊடாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. நிறைவேற்றுத்துறையின் ஒருசில அதிகாரங்களும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளன.

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தல் சட்டம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அண்மையில்



எழுத்து மூலமாக அறிவுறுத்தியுள்ளேன். இச்சட்டம் குறித்து அரசியல் கட்சிகளுடனும், சுயாதீன தரப்பினர்களுக்கும் தெளிவுபடுத்துவதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

அரசமைப்பினால் தேர்தல்கள் ஆணைக்குழு சுயாதீனமாக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் சுயாதீனத்துக்கு எதிராகச் செயற்படும் தரப்பினருக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்படலாம்.

கொவிட் பெருந்தொற்று தாக்கத்தின் போது உயிரிழந்த முஸ்லிம் சமூகத்தினரது ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டன. இவ்விடயம் குறித்து நீர்ப்பாசனத்துறை அமைச்சு அறிவியல் ரீதியில் முன்னெடுத்த ஆய்வு அறிக்கைக்கு அமைய வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி, நீர்வழங்கல் அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட நான் ஒன்றிணைந்து கூட்டாக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டமைக்கு மன்னிப்பு கோரும் வகையில் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோருகிறோம். அத்துடன் கவலையடைகிறோம்.

1983 ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி இலங்கைக்கு கரும் புள்ளியாக காணப்படுகிறது. 41 வருடங்களுக்கு முன்னர் நேர்ந்த சம்பவங்கள் பாரிய விளைவுகளை ஏற்படுத்தின. அக்காலப்பகுதியில் நாங்கள் அரசியலில் ஈடுபடவில்லை. இருப்பினும் நாட்டு பிரஜை என்ற ரீதியில் தமிழர்களிடம் மன்னிப்பு கோருகிறேன்.”– என்றார்.

# குறுகிய அரசியல் நோக்கத்துக்காக ஜே.வி.பி. தொழிற்சங்கங்களை வீதிக்கு இறக்குகின்றது

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர குற்றச்சாட்டு



"தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்காக இலவசமாக நீதிமன்றில் ஆஜராகுவதாக வாக்குறுதி வழங்கி அவர்களை வீதிக்கிறக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் சட்டத்தரணி சுனில் வடகல, பணி இடைநிறுத்தப்பட்டுள்ள மின்சார சபையின் 62 சேவையாளர்களிடமிருந்து 55 லட்சம் ஷரூபா சேவை கட்டணத்தை பெற்றுக்கொண்டுள்ளார் என மின் சாரத்துறை மற்றும் வலு சக்தித்துறை அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அமர்வின் போது ஆளும் தரப்பின் உறுப்பினர் பிரேம்நாத் சி.தொலவத்தே வாய்மூல விடைக்கான வினாக்களின் போது முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில் –

"மின்கட்டணத்தை திருத்தம் செய்ய அரசாங்கம் கொள்கை ரீதியில் எடுத்த தீர்மானத்துக்கு அமைய கடந்த 2022 ஆம் ஆண்டு மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டது.

அதனை தொடர்ந்து மூன்று தடவைகள் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், மூன்று தடவைகள் மின்கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.

புதிய மின்சார சபை சட்டத்தை நிறைவேற்றினால் மின்கட்டமைப்பு துறையின் சகல கட்டமைப்புக்களும் தனியார் மயப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுக் கொண்டு கடந்த ஜனவரி மாதம் அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி மின்சார சபை தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களிலும், தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள்.

மின்சார சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மின் விநியோகம் மற்றும் பொது சேவைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுங்கள் என்று குறிப்பிட்டோம். ஒரு சில தொழிற்சங்கத்தினர் சேவை கட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

புதிய மின்சார சபை சட்டம் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டு, சட்டம் இயற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் மின்சார சபை தனியார்மயப் படுத்தப்படவில்லை. தொழிற்சங்க நடவடிக்கையின் போது மின்சார சபையின் 62 சேவையாளர்கள் மின்சார சபையின் நிதி கரும பீடத்தை மூடி சேவை கட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தினார்கள்.

இவர்களை நான் சேவையில் இருந்து நீக்கவில்லை. மின்சார சபையின் கட்டுப்பாட்டாளரே அவர்களை சேவையில் இருந்து தற்காலிகமாக நீக்கினார்.

இவர்களுக்கு எதிராக நிறுவன மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த தொழிற்சங்கத்தினரை மக்கள் விடுதலை முன்னணியினரே வீதிக்கு இறக்கினார்கள். தொழிற்சங்க போராட்டத்தின் போது ஏதேனும் நெருக்கடிகள் ஏற்பட்டால் நீதிமன்றத்தில் இலவசமாக முன்னிலையாகுவதாக மக்கள் விடுதலை முன்னணியினர் குறிப்பிட்டுள்ளார்கள். இருப்பினும் இந்த 62 சேவையாளர்களிடமிருந்து மக்கள் விடுதலை முன்னணியின் சட்டத்தரணி சுனில் வடகல 55 லட்சம் ஷரூபாவை பெற்றுக்கொண்டுள்ளார். நாட்டு மக்கள் உண்மையை தெரிந்துக் கொள்ள வேண்டும்."– என்றார்.



# சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜெயக்குமார் காலமானார்

சிரேஷ்ட ஊடகவியலாளரும் சட்டம் தொடர்பான பல நூல்களின் ஆசிரியரும் அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளருமான டி.ஜெயக்குமார் நேற்று முன்தினம் மாலை தனது 63ஆவது வயதில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் 240,குடமாதுவ, பிலியந்தலையில் உள்ள வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரியைகள் இன்று 23ஆம் திகதி புதன்கிழமை குடமாதுவ பொது மயானத்தில் இடம்பெறுகின்றன.

அன்னார் தினமின பத்திரிகையின் முன்னாள் செய்தி ஆசிரியரும் சிரேஷ்ட பத்திரிகையாளருமான டி.சந்திர சேகரனின் மூத்த சகோதரர் ஆவார்.

டி.ஜெயக்குமார் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் பிராந்திய ஊடகவியலாளராக ஊடகத்துறையில் பிரவேசித்தவர். அதன் பின்னர் சிரச ஊடக வலயமைப்பின் நீதிமன்ற நிருபராகவும், இரிதா பெரமுன பத்திரிகையின் செய்தி ஆசிரியராகவும் தொழிலாளர் தீர்ப்பாயம் மற்றும் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றியவர்.

இவர் கொழும்பு, புதுக்கடையில் அமைந்துள்ள ஜே.கே. அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பு சேவை நிறுவனத்தின் ஸ்தாபகராவார்.

அத்தோடு பல மொழிகளை மொழிபெயர்க்கக் கூடிய தகுதிவாய்ந்தவராவார்.



# இந்தன் முத்துவிநாயகர் கோவிலில் களவுபோன 62 பவுண் நகைகள் முழுமையாக மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறையில் உள்ள புளியங்கூடல் இந்தன் முத்து விநாயகர் கோவில் நகைகளைக் அபக ரித்த குற்றச்சாட்டில் கைதாகிய பூசகரிடம் இருந்து மேலும் 22 பவுண் நகைகளும் பணமும் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் உதவி பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் ஊர்காவற்துறை நீதி வான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது 3 நாள்கள் தடுத்து வைத்து விசாரிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதன்படி பூசகரிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளின் போது மேலும் 22 பவுண் நகைகளும் பணமும் கைப் பற்றப்பட்டன.

ஆலயத்துக்குள் பாதுகாப்பாகப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 62 பவுண் நகைகள் மற்றும் 8 லட்சம் ஷரூபா பணம் என்பன காணாமல் போயிருந்தன. இது தொடர்பாக ஊர் காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆலயப் பெட்டகம் உடைக்கப்படாத நிலையில், போலிச் சாவிகளைகளைப் பயன்படுத்தி நகைகள், பணம் என்பன அபகரிக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.

இந்தநிலையில் குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என்று அந்தப் பிரதேச மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர்.

இந்த விசாரணை இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது என்ற மக்களின் குற்றச்சாட்டு, யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக காளிங்க ஜெயசிங்கவின் கவனத்துக்குச் சென் றதை அடுத்து, இந்தச் சம்பவம் தொடர் பான விசாரணைகளை அவர், யாழ்ப் பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டாரவின் கீழ் இயங்கும் யாழ் மாவட்டக் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவுக்கு மாற்றினார்.

அதன்பின்னர் யாழ் மாவட்டக் குற்றத் தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி சமன் பிரேமதிலக வழிகாட்டலில் சப் இன்ஸ் பெக்டர் பிரதீப் தலைமையிலான பொலிஸ் குழு இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

விசாரணைகளின் அடிப்படையில் 28 வயதுடைய பூசகர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் ஆலயத் திருவிழா வின்போது உதவி பூசகராகச் செயற் பட்டிருந்தார்.

சந்தேகநபரிடம் இருந்து 40 பவுண் நகைகள் மீட்கப்பட்டமையுடன், ஏனைய நகைகள் வங்கியில் அடகு வைக்கப் பட்டுள்ளமை கண்டறியப்பட்டிருந்தது.

இந்நிலையில் பொலிஸாரின் விசார ணைகளின் போது திருடப்பட்ட நகைகள் அனைத்தும் பொலிஸாரால் மீட்கப்பட் டுள்ளன.

# ஜனாதிபதி நிதியத்தின் புலமைப் பரிசில் பிக்குணி மாணவர்களுக்கு வழங்கப்படும்

3000 பிக்கு மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவின்படி செயற்படுத்தப்படும் பிரிவேனா மற்றும் பிக்குணி கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் பிக்குகள் மற்றும் சாதாரண மாணவர்களுக்காக ஜனாதிபதி நிதியத்தினால் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ் இந்தப் புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது.

இதுவரை காலமும் பிரிவேனாக்களில் கற்கும் பிக்கு மாணவர்களை ஊக்குவிக்கும் புலமைப்பரிசில் திட்டங்கள் எதுவும் செயற்படுத்தப்படவில்லை.

ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் நாடளாவிய ரீதியில் இந்த புலமைப்பரிசில் திட்டம் செயற்படுத்தப்படுவது விசேட அம்சமாகும்.

பிரிவேன் (சாதாரண தரம்), க.பொ.த(சாதாரண தரம்) பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்து உயர் பிரிவேன் பரீட்சைக்கு




அல்லது க.பொ.த(உ.த) பரீட்சைக்கு தோற்றும் பிக்கு மாண வர்கள், பிக்குணிகள் மற்றும் சாதாரண மாணவர்களுக்கு மாதம் 6000 ஷரூபா வீதம் 24 மாதங்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட உள்ளது.

எதிர்வரும் நாள்களில் இந்த புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்விற்கு அழைக்கப்படாத ஏனைய மாணவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக தவணை தொகை வைப்புச் செய்யப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தொழில்நுட்பம், அழகியல் பாடங்களை நீக்கியமை முட்டாள்தனமான செயற்பாடு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

"முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்தின்படி தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம், அழகியல் பாடங்களை நீக்குவது முட்டாள்தனமான செயல்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடு கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பி டுகையில் –

"2006 ஆம் ஆண்டில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பாடத்த ிட்டத்தில் சேர்க்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடம், முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்தில் பரீட்சை திணைக்



களத்தால் மதிப்பிடப்பட்ட 7 முக்கிய பாடங்களுக்குள் உள்ளடக்கப்பட வில்லை. இலங்கையை டிஜிட்டல் இலங் கையாக உருவாக்கும் நோக்கில் செயற் படும் இவ்வேளையில், இவ்வாறான முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கக் கூடாது.

முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்தின்படி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடத்தை கல்விப் பொதுத் தராதர சாதா ரண தரப் பரீட்சைக்கான பாடங்களில் ஒன்றாக அதனை உள்ளடக்குவதில்லை என தீர்மானித்துள்ளனர்.

ஆனால், மாறிவரும் தொழில்நுட்ப யுகம் உருவாகியுள்ள இவ்வேளையில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் என்ற பாடம் உள்ளடக்கப் பட வேண்டும். அவ்வாறே அழகியல் பாடத்தையும் நீக்கியுள்ளனர். எனவே இந்தப் பாடங்களை நீக்குவது தொடர்ப ாக அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானம் முட்டாள்தனமான செயல் . எனவே இது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும்."– என்றார்.




# தன்னைப் போட்டுத்தள்ள பிளான் போடுகிறார்களா? பிள்ளையானின் மீது சாணக்கியன் பகீர் குற்றச்சாட்டு

தமக்கு உயிராபத்து இருப்பதாக வெளியான செய்தி ஒன்று தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் நாடாளுமன்றில் நேற்றுச் சுட்டிக்காட்டினார்.

இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தரப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனை கொலை செய்யத் திட்டமிட்டுள்ளனர் என சர்வதேச புலனாய்வுப் பிரிவு ஒன் றின் மூலம் தகவல் கிடைத்திருப்பதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து நேற்றையதினம் நாடா ளுமன்றில் பிரஸ்தாபித்த சாணக்கியன், இந்தச் செய்தி தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, பொலிஸ்மா அதிபருக்குத் தாம் கடிதம் அனுப்பியுள்ளார் எனத் தெரிவித் தார்.

நேற்று நாடாளுமன்றத்தில் சிறப் புரிமை மீறல் பிரச்சினையை முன் வைத்து உரையாற்றிய போது சாணக் கியன் கூறியவை வருமாறு:–

என்னை படுகொலை செய்வதற்கு இராஜாங்க அமைச்சர் ஒருவர் சதி செய் வதை வெளிநாட்டு புலனாய்வுப்பிரி வொன்று கண்டுபிடித்துள்ளதாக தனி யார் இணையத்தள செய்தித் சேவை கடந்த 20 ஆம் திகதி செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த செய்தியின் உண்மை தன்மை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் அச்செய்தி பாரதூரமானது. இந்த விட யம் தொடர்பில் நான் சபாநாயகருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளேன்.

என்னைப் படுகொலை செய்வதற்கு சதி செய்வதாக கூறப்பட்டுள்ள இரா ஜாங்க அமைச்சர் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் ஒருவரை படுகொலை செய்தமை மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புபட்டவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே இந்த செய்தி தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சபாநாயகரிடம் வலியுறுத்துகின்றேன்.

மக்களால் தெரிவுசெய்யப்பட நாடா ளுமன்ற உறுப்பினருக்கே இந்த நிலைமை எனில் மக்களின் நிலையை யோசித்துப்பாருங்கள். – என்றார்.

எனினும் இது தொடர்பாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந் தனின் உடனடி கருத்து கிடைக்கப் பெறவில்லை.

# மத்திய பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிப்பால் நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதில்லை

## முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு



“பிரதமர் தலைமையில் நிதி ஆயோக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் நானும் பங்கேற்க திட்டமிட்டிருந்தேன். அதற்காக தயாராகிக் கொண்டிருந்தேன். ஆனால், மத்திய பட்ஜெட்டில் தமிழகம் ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் கண்டிக்கும் வகையில், அக்கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என்று முடிவெடுத்துள்ளேன். அதை புறக்கணிக்கப் போகிறேன்,”

- இவ்வாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஏற்கெனவே மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை ஒட்டி, ஒரு நீண்ட அறிக்கை கொடுத்திருக்கிறேன். அதையொட்டி, ஒரு முக்கிய முடிவை நான் எடுத்திருக்கிறேன். மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இன்றைக்கு தாக்கல் செய்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை மிகப் பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கிறது.

மூன்றாவது முறையாக வாக்களித்த மக்களுக்கு இந்த பா.ஜ.க கூட்டணி அரசு எந்த நன்மையும் செய்யத் தயாராக இல்லை என்பதை இந்த நிதிநிலை அறிக்கை தெளிவாக காண்பிக்கிறது. நிதிநிலை அறிக்கையில் தமிழகத்துக்கு என்று என்னென்ன திட்டங்கள் அறிவிக்கவேண்டும் என்று இரண்டு நாள்களுக்கு முன் நான் டுவிட்டரில் வெளியிட்டிருந்தேன். பல கோரிக்கைகளை அதில் எடுத்து வைத்தேன். நிதிநிலை அறிக்கையில் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன்.

மூன்று ஆண்டுகளாக விடுவிக்கப்படாமல் இருக்கும் சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கான நிதியை விடுவிக்க வேண்டும். கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான ஒப்புதலை விரைந்து வழங்க வேண்டும். தமிழகத்தில் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள ரயில்வே திட்டங்களை விரைந்து செயல்படுத்திய நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும். தாம்பரம் - செங்கல்பட்டு இடையே மேம்பால விரைவு சாலைத் திட்டத்துக்கான ஒப்புதலை உடனடியாக வழங்க வேண்டும் என்று சில கோரிக்கைகளை வைத்திருந்தேன்.

அந்தக் கோரிக்கைகளில் எதையும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை. மைனாரிட்டி பா.ஜ.கவை, மெஜாரிட்டி பா.ஜ.கவாக ஆக்கிய ஒரு சில மாநிலக் கட்சிகளை திருப்திப்படுத்தும் வகையில் ஒரு சில மாநிலங்களுக்கு மட்டும் சில திட்டங்களை அறிவித்துள்ளார். அறிவித்துள்ளார்களே தவிர, அதையும் நிறைவேற்றுவார்களா என்பது என்னைப் பொறுத்தவரைக்கும் சந்தேகம்தான்.

எப்படி தமிழகத்துக்கு மெட்ரோ ரயில் என்று அறிவித்து விட்டு, நிதி ஒதுக்காமல் இன்றைக்கு வரையில் ஏமாற்றி வருவதைப் போல அது போல, அந்த மாநிலங்களுக்கும் எதிர்காலத்தில் நடக்காது என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. தமிழகம் மிகப் பெரிய இரண்டு இயற்கைப் பேரிடரை எதிர்கொண்டது. 37 ஆயிரம் கோடி ரூபா வரை இழப்பீடு நாம் கேட்டோம். தொடர்ந்து வலியுறுத்தி கேட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், இதுவரை 276 கோடி ரூபா தான் கொடுத்துள்ளார்கள். அது சட்டப்படி வரவேண்டிய தொகை. இதில் என்ன வேடிக்கை என்னவென்றால், இரண்டு மூத்த மத்திய அமைச்சர்கள் பாதுகாப்புத் துறை அமைச்சர், நிதியமைச்சர் என்று இருவரும் நேரடியாக பார்த்து விட்டு சென்றார்கள். இப்படித்தான் தமிழக மக்களை பா.ஜ.க. மதிக்கின்றதா என்பது தான் என்னுடைய கேள்வி.

தமிழகத்துக்கான எந்த சிறப்புத் திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை. நமது கோரிக்கைகள் எதுவுமே இதில் நிறைவேற்றப்படவில்லை. புதிய ரயில்வே திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை. மத்திய பா.ஜ.க. ஆட்சியைத் தாங்கிப் பிடிக்கும் மாநிலங்களைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களைங்களையும் நிதி அமைச்சர் மறந்தே போய்விட்டார். தமிழ்நாடு என்ற சொல்லே நிதிநிலை அறிக்கையில் இல்லை என்று சொல்வதைவிட, மத்திய பா.ஜ.க. ஆட்சியாளர்களின் சிந்தனையிலும், செயலிலும் தமிழ்நாடு இல்லை. பாரபட்சமும் ஏமாற்றமும்தான் இந்த அறிக்கையில் இருக்கிறது. ஒரு நாட்டின் நிதி நிலை அறிக்கை என்பது அந்த நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அந்த வகையில், நிதி ஒதுக்கீட்டில் நீதி இல்லை. அநீதியே அதிகம் உள்ளது.

அரசியலை தேர்தல் களத்தில் பார்த்துக் கொள்ளலாம். இப்போது இணைந்து நாட்டுக்காக பணியாற்ற வேண்டும் என்று பிரதமர் நேற்றுதான் சொல்லியிருக்கிறார். அனைத்து பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. ஆனால், அவர் நேற்று சொன்னதற்கு எதிராக இன்றைக்கு அவருடைய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. வாக்களித்தவர்களுக்கு மட்டுமல்ல, வாக்களிக்காதவர்களுக்கும் நன்மைகள் செய்வதுதான் ஒரு சிறந்த அரசு என்று நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறேன். அப்படிதான் தமிழக அரசின் செயல்பாடுகளும் இருக்கிறது. இதை பார்த்தாவது, மத்திய அரசு தன்னுடைய போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எதிர்வரும் 27 ஆம் திகதி பிரதமரின் தலைமையில் நிதி ஆயோக் கூட்டம் நடப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நானும் அதில் பங்கெடுக்க திட்டமிட்டு இருந்தேன். அதற்காக தயாராகிக் கொண்டிருந்தேன். ஆனால், நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் அந்தக் கூட்டத்தில் பங்கேற்கவேண்டாம் என்று நான் முடிவெடுத்திருக்கிறேன். அதைப் புறக்கணிக்கப் போகிறேன். தமிழகத்தை புறக்கணிக்கும் மத்திய அரசின் கூட்டத்தை ஒட்டுமொத்தமாகப் புறக்கணிப்பதே சரியானது என நினைக்கிறேன்.

தமிழகத்தின் தேவைகளை, உரிமைகளை நிலைநாட்ட மக்கள் மன்றத்தில் தொடர்ந்து நாங்கள் போராடுவோம். நாளைய தினம் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் டில்லியில் போராட்டம் நடத்தப் போகிறார்கள், அதற்கு நாங்கள் அனுமதியும் வழங்கியிருக்கிறோம்.”

- என்றார்.

# பா.ஜ.கவின் நாற்காலியை காப்பாற்றும் ‘பட்ஜெட்’

## ராகுல் காந்தி விமர்சனம்



“பா.ஜ.கவின் நாற்காலியை காப்பாற்றிக்கொள்ளும் வகையில் மத்திய பா.ஜ.க. அரசு பட்ஜெட் தாக்கல் செய்துள்ளது.”

- இவ்வாறு மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கருத்து தெரிவித்துள்ளார்.

மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் 2024-25 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டை நேற்று மக்களவையில் தாக்கல் செய்தார். இதில் ஆந்திரா மற்றும் பிஹார் மாநிலத்துக்கு சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

இதனைக் குறிப்பிட்டு எதிர்க்கட்சிகள் விமர்சனம் செய்து வருகின்றன. மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி பட்ஜெட் குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“பா.ஜ.கவின் நாற்காலியை காப்பாற்றிக்கொள்ளும் பட்ஜெட் இது. மற்ற மாநிலங்களின் பணத்தில் பா.ஜ.க. தனது கூட்டணி மாநிலங்களுக்கு வெற்று வாக்குறுதியை கொடுத்துள்ளது. சாதாரண குடிமக்களுக்கு பட்ஜெட்டில் எந்த நிவாரணமும் இல்லை. மாறாக, கூட்டாளிகளுக்கு நன்மை பயக்கும் வகையில் மத்திய அரசு பட்ஜெட் தாக்கல் செய்துள்ளது. மேலும், காங்கிரஸின் தேர்தல் அறிக்கை மற்றும் முந்தைய பட்ஜெட்டுகள் பிரதி செய்யப்பட்டுள்ளன.” - என்று கடுமையாக விமர்சித்துள்ளார்.




# உக்ரைனுக்கு ஆதரவாக களமிறங்குவதற்கு தயார் நிலையில் 5 லட்சம் நேட்டோ படைகள்

உக்ரைனுக்கு உதவ நேட்டோ கூட்டமைப்பைச் சேர்ந்த 5 லட்சம் இராணுவ வீரர்கள் தயார் நிலையில் இருக்கின்றனர் என நேட்டோ தெரிவித்துள்ளது.

பெல்ஜியத்தை தலைமையிடாக கொண்ட நேட்டோ அமைப்பில் இறுதியாக சுவீடன் நாடு இணைந்துள்ளது.

இந்த கூட்டமைப்பில் தற்போது 32 நாடுகள் உள்ளன. இந்த கூட்டமைப்பில் இணைய உக்ரைனும் பல ஆண்டுகளாக முயற்சித்து வருகிறது. ஆனால் சில உறுப்பு நாடுகளின் எதிர்ப்பால் உக்ரைனால் இன்னும் இணைய முடியவில்லை.

இதற்கிடையே உக்ரைனின் இந்த முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து ரஷ்யா அதன் மீது போர் தொடுத்தது.

எனவே உக்ரைனுக்கு ஆதரவாக நேட்டோ கூட்டமைப்பில் உள்ள நாடுகள் பல்வேறு உதவிகளை வழங்குகின்றன. அவற்றின் மூலம் உக்ரைனும் ரஷ்யாவுக்கு பதிலடி கொடுத்து வருகிறது.

இந்தநிலையில் நேட்டோ கூட்டமைப்பைச் சேர்ந்த 5 லட்சம் இராணுவ வீரர்கள் தயார் நிலையில் உள்ளனர்.

எனவே ரஷ்யாவை தனிமைப் படுத்தவும், உக்ரைனுக்கு வழங்கப் படும் இராணுவ உதவிகளை மேலும் அதிகரிக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன என நேட்டோ செய்தித் தொடர்பாளர் பரா தக்லல்லாஹ் தெரிவித்துள்ளார்.




# எத்தியோப்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 229 பேர் பலி

எத்தியோப்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி இதுவரையில் 229 பேர் உயிரிழந்துள்ளனர்.

எத்தியோப்பியாவின் கோபா பிரதேசத்தில் நேற்று முன்தினம் பெய்த கடும் மழையுடன் ஏற்பட்ட நிலச்சரிவினால், இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. நிலச்சரிவில் சிக்குண்ட நூறுக்கும் அதிகமானோர் காயமடைந்த நிலையில், மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணிகளில் தொடர்ந்தும் மீட்புக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வன்முறைகளின் பின்னணியில் எதிர்க்கட்சி பங்களாதேஷ் பிரதமர் ஹசீனா குற்றச்சாட்டு



பங்களாதேஷில் இடம்பெற்ற வன்முறைகளின் பின்னணியில் அந்த நாட்டின் எதிர்க்கட்சியின் சூழ்ச்சி சம்பந்தப் பட்டிருப்பதாக பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹசீனா குற்றம் சுமத்தியுள்ளார்.

தொழில் ஒதுக்கச் சட்டம் தொடர்பாக எழுந்த எதிர்ப்பின் காரணமாக அந்த நாட்டில் கடுமையான வன்முறைகள் பதிவாகி இருந்தன. இதனால், 150 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகினர் என தெரிவிக் கப்படுகிறது.

இதுதொடர்பாக அந்த நாட்டின் வர்த்தகத் தரப்பினருடன் கலந்துரையாடிய ஷேக் ஹசீனா, நாட்டின் பாதுகாப்பு கருதி அமுலாக்கப்பட்ட ஊரடங்கு சட்டம், நிலைமை சீரடையும் போது தளர்த்தப்படும் என்று கூறியுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.07.2024



மேஷம்

இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். உங்கள் தேவைகள் நிறைவேறும். இன்றைய நாளை முக்கிய முடிவுகள் எடுக்க பயன்படுத்தலாம்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் திருப்தியும் உற்சாகமும் காணப்படும். நீங்கள் பணிகளை மகிழ்ச்சியுடன் மேற்கொள்வீர்கள்.

நல்ல உணர்வுகளை பகிர்ந்து கொள்ள இன்று இனிமையான நாள். உங்கள் புரிந்துணர்வு காரணமாக இது சாத்தியம். நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். எதிர்காலத் திற்காக நீங்கள் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.உங்களிடம் ஆற்றலும் உற்சாகமும் நிறைந்து காணப்படும்.



ரிஷபம்

இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். இன்று துடிப்பான நாளாக காணப படும்.இன்று பயணம் மேற்கொள்ள வாய்ப்புள்ளது. அதன் மூலம் உங்கள் ஆற்றல் பெருகும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சாதகமான பலன்கள் கிடைக்கும். நீங்கள் செய்யும் பணியில் திருப்தி காண்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

உறவு சம்பந்தப்பட்ட விஷயங்கள் இன்று சுமூகமாக நடக்கும். உங்கள் துணை உங்கள் உணர்வை நன்கு புரிந்து கொள்வார். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்றைய தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் அளவிற்கு பணம் காணப்படும். பணத்தை சிறந்த முதலீடு செய்வதற்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



மிதுனம்

இன்று உங்களிடம் பாதுகாப் பின்மை உணர்வு நிறைந்து காணப் படும். இதனால் உங்கள் எதிர்காலம் குறித்த பயம் காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த உணர்வை சமாளிக்கலாம்.

இன்று பணிகள் அதிகரித்து காணப்படும். தவறுகள் நேராமல் இருக்க பணிகளை சிறப்பாக திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. இதற்கு காரணம் நீங்கள் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ளாததே ஆகும்.

அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும். சூழ்நிலையை திறமையாக சமாளிக்க இயலாத நிலை இருக்கும். தேவையற்ற பொறுப்புகள் கவலை அளிக்கும்.



கடகம்

இன்று மந்தமான நாளாக இருக்கும். மனக்குழப்பம் காணப்படும். எனவே பொருத்தமான முடிவுகளை எடுக்க இயலாது. சிறிது பொறுமையுடன் இருப்பது நல்லது.

பணியிடத்தில் சில பிரச்சினைகளை சந்திக்க நேரலாம். சக பணியாளர்களின் தொல்லைகள் காணப்படும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறாது.

உணர்சிவயப்படுதல் காரணமாக உறவில் நல்லி ணக்கம் பாதிக்கப்படும். நீங்கள் அமைதியாக கட்டுப் பாட்டுடன் இருக்க வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அஜாக்கிரதை காரணமாக பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.பணத்தை கையாளும்போது கவனம் தேவை.



சிம்மம்

இன்று நீங்கள் அமைதியுடன் இருப்பீர்கள். நம்பிக்கை உணர்வுடன் இருப்பீர்கள். அனுசரணையான போக்கு காணப்படும்.

இன்று உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்றுவீர்கள். சக பணியாளர்கள் மற்றும் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். உங்கள் தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள்.அது வெற்றிக்கு வழி வகுக்கும்.

உங்கள் துணையுடன் நீங்கள் நட்புறவோடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கம் வளரும்.

இன்று பண வரவிற்கான சாத்தியம் உள்ளது.பணத்தை ஆக்கப்பூர்வமான காரியங்களுக்கு செலவு செய்வீர்கள்.

நீங்கள் இன்று சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.



கன்னி

இன்று நகைச்சுவை உணர்வுடன் காணப்படுவீர்கள்.அதனால் உற்சாகம் ஏற்படும். உங்களைச் சுற்றியிருக்கும் விஷயங்களை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்வீர்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். கடினமான பணிகளையும் எளிதாக ஆற்றுவீர்கள்.

இன்று உங்களிடம் நகைச்சுவை உணர்வு காணப்படும். இந்த அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். நீங்கள் மகிழ்ச்சியான ஆரோக்கியமான உறவை பராமரிப்பீர்கள். பணம் இன்று தேவையை விட அதிகமாக இருக்கும். இன்று அதிகம் சேமிப்பீர்கள். புதிய முதலீடு செய்வதற்கான வாய்ப்பும் உள்ளது.



துலாம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று எதையோ இழந்தது போல உணர்வீர்கள். இது வெறும் உணர்வு மட்டுமே. உங்களிடம் இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படும்.

இன்று பணியிடத்தில் அதிக வளர்ச்சி காண முடியாது.முறையாக திட்டமிடாததே இதற்கு காரணம். இதனால் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினை காணப்படும். குடும்ப பிரச்சினை காரணமாக இருவரிடையே வாக்குவாதம் ஏற்படும்.

நிதி வளர்ச்சியில் இன்று பாதிப்பு காணப்படும். இன்று அதிக செலவுகள் செய்ய நேரும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

கண் சம்பந்தமான பிரச்சினை இன்று காணப்படும்.



விருச்சிகம்

இன்று அதிக பதட்டம் காணப்படும். தியானம் அல்லது யோகா செய்வதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம்.

கவனக்குறைவு காரணமாக இன்று பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. அதனை நீங்கள் தவிர்த்தல் வேண்டும்.

உங்கள் துணையுடன் அகந்தை உணர்வு காரணமாக பிரச்சினை ஏற்படும். சரியான புரிந்துணர்வு இல்லாததே இதற்கு காரணம். அதனை வளர்த்துக் கொள்ள முயலுங்கள்.

இன்று பண இழப்பு காணப்படும். பணத்தை கையாளும்போது கவனம் தேவை. இன்றைய நாளை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.

மன உளைச்சல்காரணமாக இன்று கால் வலியால் அவதிப்பட நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 24.07.2024




இன்று உங்களிடம் நம்பிக்கை உணர்வு காணப்படும். இந்த உணர்வு காரணமாக பொருத்தமான முடிவுகளை எடுப்பீர்கள்.

நீங்கள் பணியிடத்தில் தலைமைப் பண்புகளை வெளிப்படுத்துவீர்கள்.இதன் மூலம் சிறந்த வளர்ச்சி காணப்படும்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். நீங்கள் இருவரும் காதலை அனுபவித்து மகிழ்வீர்கள்.

இன்று ஊக்கத் தொகை வகையில் கூடுதல் பண வரவு காணப்படும். உங்கள் கடின உழைப்பிற்கு பலன் கிடைக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் தன்னம்பிக்கை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சுமாரான பலன்களே கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிகரிக்கும் பொறுப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பணிகள் அதிகமாக காணப்படும். அதனை விரைவில் முடித்துத் தர வேண்டியிருக்கும். அது அவ்வளவு எளிதானதல்ல. உங்கள் துணையுடன் தொடர்பு கொள்ளும் போது பொறுமை இழப்பீர்கள். இதனால் இருவரிடையேயான நல்லுறவு பாதிக்கும்.

தேவையற்ற செலவுகள் கவலையை அளிக்கும். நிலைமையை சமாளிக்க கையில் போதிய பணம் இருக்காது. இது உங்களுக்கு சற்று கவலை அளிக்கும்.

இன்று பதட்டம் காரணமாக கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சிறந்த பலன்களை அடைய இயலாது. அது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் திறமையை அதிகரிக்க முறையாக திட்டமிடுவது சிறந்தது.

நீங்கள் ஏற்படுத்தும் சிறிய பிரச்சினைகள் உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும். உங்கள் துணையுடன் நீங்கள் நட்புறவோடு நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம். சோம்பலான அணுகுமுறை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படலாம். சளி சம்பந்தமான பிரச்சினையால் இன்று பாதிப்பு ஏற்படும். ஒவ்வாமை காரணமாக இன்று அசௌகரியம் காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் சிறிது வெற்றி காணலாம்.

உங்கள் மேலதிகாரிகளுடன் மோதல்கள் காணப்படும். உங்களின் திறமை காரணமாக அவர்களை மிஞ்சி விடுவீர்கள் என்று நினைப்பதால் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

புரிந்துணர்வின்மை காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதம் ஏற்படும். நட்பான உறவு வேண்டுமெனில் இதனை நீங்கள் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பயணத்தை தவிர்ப்பது நல்லது. உங்கள் தந்தையின் ஆரோக்கியத்திற்கு பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இன்று கால் வலி காணப்படும்.





